நல்லூர் இ... நூலகம்
மாநகர... ம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை (26-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily சுதிர் 180

## புலிகள் 15 நிமிட நேர அதிரடித் தாக்குதல்:

# செட்டிகுளத்தில் படையினரின் எட்டு காவலரண்கள் தகர்ப்பு!

### சிப்பாய் பலி; 15 பேர் படுகாயம் படையினரின் டிராக்டர் எரிப்பு

யாழ்ப்பாணம், மே 26

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 3-15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய 15 நிமிட நேர அதிரடித் தாக்குதலில் எட்டு காவலரண்கள் தகர்க்கப்பட்டன; சிப்பாய் ஒருவர் பலியானார்; 15 பேர் படுகாயமடைந்தனர்; தாக்குதல் இடம் பெற்ற பகுதியில் இருந்து ஏராளமான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்; படையினரின் டிராக்டர் ஒன்றும், காவலரண்களும் விடுதலைப் புலிகள் வீரர்களால் எரிக்கப்பட்டன.

செட்டிகுளம் — தந்திரிமலை வீதியில் தொடர்ச்சியாக காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்த பகுதிகளுக்கு இடையில் டிராக்டர் ஒன்றில் இருபதுக்கும் மேற்பட்ட படையினர் ரோந்து சென்றனர்.

அச்சமயமே விடுதலைப் புலிகள் அவர்கள் மீது திடீரென தாக்குதலைத் தொடுத்தனர்.

புலிகளின் தாக்குதலில் நிலைகுலைந்த இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள காவலரண்களை நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

காவலரண்களில் புகுந்து கொண்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் ஆக்ரோசத் தாக்குதல்களைத் தொடர்ந்தனர்.

அப்போது இராணுவத்தினரில் ஒருவர் உயிரிழந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், மே 26

செட்டிகுளம் - தந்திரிமலைப் பகுதியில் புலிகள் கைப்பற்றிய ஆயுத மற்றும் இராணுவத் தளபாடங்கள் வருமாறு:-

- ★ ரி - 56 புதிய ரகத் துப்பாக்கி — 1
- ★ ரி 81 - 1 ரகத் துப்பாக்கி — 1
- ★ SLR ரகத் துப்பாக்கி — 1
- ★ ரி-56 ரவைக் கூடுகள் — 3
- ★ AK ரவைக் கூடு — 1
- ★ நடுத்தர ரவைகள் — 144
- ★ நேட்டோ ரவைகள் — 20
- ★ தலைக் கவசம் — 5
- ★ சப்பாத்து — 18சோடி
- ★ கிற்பக் — 8
- ★ இடுப்புப்பட்டி — 12
- ★ தொப்பி — 9

[ஓ]

### வற்றாப்பளைச் சம்பவம்:

### விசாரணை இன்று வவுனியாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 26

முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோயிலின் வருடாந்த பொங்கல் உற்சவ தினமன்று பக்தர்கள் மீது இடம்பெற்ற ஷெல் வீச்சுச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வவுனியாவிலேயே இடம்பெற உள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட — நீதியரசர் ஜெயலத் தலைமையிலான — மூவர் குழு இன்று செவ்வாய்க்கிழமை வவுனியாக் கச்சேரியில் தனது விசாரணைகளை ஆரம்பிக்கிறது

காலை முதல் மாலை வரை சாட்சியங்கள் பதிவு செய்யப்படும்.

விசாரணைக் குழுவினர் முல்லைத்தீவு செல்வது பாதுகாப்பற்றது என்று கருதப்படுவதாகவும் —

அதனாலேயே விசாரணையை வவுனியாவில் வைக்க முடிவு செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பொலீஸார் உயிரிழப்பு

மணிலா, மே 26

கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் விசேட அதிரடிப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

(உ-10)

### கொக்கட்டிச்சோலையில் படகு கவிழ்ந்து 16 பேர் பலி!

கொழும்பு, மே 26

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைக்கு அருகே மண்முனைப் பகுதியில் உள்ள வாவி ஒன்றில் படகு கவிழ்ந்து 16 பேர் உயிரிழந்தனர். அவர்களில் எட்டுப் பேரின் சடலங்களே நேற்று வரை மீட்கப்பட்டன.

உயிரிழந்தவர்களில் அனேகமானோர் தமிழ் விவசாயிகளாவர்.

அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்ற படகே விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

எட்டு மைல் தொலைவில் உள்ள மட்டக்களப்பு நகருக்குச் சென்று பொருள்களை வாங்கிக்கொண்டு திரும்பிய விவசாயிகளே படகு விபத்தில் சிக்கினர் என்று கொக்கட்டிச்சோலை உதவி அரச அதிபர் திரு. சி. அருணகிரிநாதர் தெரிவித்தார்.

[உ-எ-10]

### தமிழ் நாடு விருதுநகரில் பஸ்ஸில் குண்டு வெடிப்பு!

### இருவர் பலி; 40 பேர் காயம்

சென்னை, மே 26

தமிழ்நாடு காமராஜர் மாவட்டம் விருதுநகரில் நேற்றுப் பகல் பஸ் ஒன்றில் திடீரென குண்டு வெடித்ததில் இருவர் உயிரிழந்தனர். 41 பேர் படுகாயமடைந்தனர்.

சுயாதீன செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

அருப்புக்கோட்டையிலிருந்து ராஜபாளையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸிலேயே குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

ஆனால் — என்ஜினில் இருந்து கிளம்பிய தீப்பொறி காரணமாகவே பஸ் தீப்பற்றியது என்றும் —

அதனால் பஸ் முழுவதும் எரிந்து விட்டதாவும் விருது நகர் பொலீஸ் அத்தியட்சகர் சேகர் தெரிவித்திருக்கிறார்.

பஸ்ஸில் தீப்பிடித்ததால் அதன் சாரதி கட்டுப்பாட்டை இழந்தார் என்றும் — பின்னர் பஸ் அருகில் உள்ள வயலில் இறங்கி ஓடியது என்றும் பொலீஸார் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

### இரு பாக். ராஜதந்திரிகளும் வெளியேற இந்தியா பணிப்பு

புதுடில்லி, மே 26

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணிபுரிந்து வந்த இரண்டு பாகிஸ்தானிய சிரேஷ்ட ராஜதந்திரிகளை அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறும்படி இந்திய அரசு நேற்று உத்தரவிட்டது.

இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக நடந்து கொண்டதற்காக அந்த ராஜதந்திரிகள் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக புதுடில்லி அரசு தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை —

பாகிஸ்தானிய உளவு நிறுவனத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்திய ராஜதந்திரி ராஜேஷ் மித்தலின் உடல்நிலை இன்னும் மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ராஜேஷ் மித்தலை நாட்டை விட்டு வெளியேறும்படி பாகிஸ்தான் அரசும் உத்தரவிட்டுள்ளது தெரிந்ததே. [உ-எ]

### திருக்கோயில் பகுதியில் பொலீஸ் அதிகாரி பலி!

கொழும்பு, மே 26

ரோந்து சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப் படையினரின் வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். இரு பொலீஸார் காயமடைந்தனர்

அம்பாறை மாவட்டம் திருக்கோயிலில் உள்ள கோளாவில் தமிழ் கிராமத்தில் கடந்த வெள்ளி இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலில் கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரி ஏ. ஜி. அத்துக்கோரள என்றும் தெரிவிக்கப்பட்டது.

### வவுனியாவில் தமிழர் கைது!

யாழ்ப்பாணம், மே 26

வவுனியா நகரில் தமிழ் இளைஞர்கள் பரவலாக கைது செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொலீஸார் நகரின் பல பகுதிகளிலும் திடீர் திடீரென தேடுதல் வேட்டையில் இறங்கி தமிழ் இளைஞர்கள் பலரை கைது செய்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

அன்றைய தினம்—

வவுனியா நகருக்குள் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் —

தாண்டிக்குளம் 'சென்றி'யில் வைத்து 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [ஓ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் மீதான முறைப்பாடு இவ்வாரம் விசாரணை

## நாடாளுமன்ற வாக்களிப்பு மூலம் தண்டனை

கொழும்பு, மே 26

நாடாளுமன்றத்தில் சபாநாயகரை நிந்திக்கக்கூடிய விதத்தில் நடந்து கொண்டதாகக் கூறப்படும் ஆறு சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் மீதான முறைப்பாட்டை நாடாளுமன்ற உரிமைகள் குழு இவ்வாரம் விசாரணை செய்ய விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குழுவின் தலைவரும் சபை முதல்வருமான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா விசாரணைக்குத் தலைமை வகிப்பார்.

நாடாளுமன்றத்தில் அன்றைய தினம் இடம்பெற்ற அசம்பாவிதத்தை நேரில் கண்டவர்களை முதலில் சாட்சியமளிக்குமாறு குழு அழைக்கும். அவர்களின் சாட்சியங்களை பதிவு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட எம்.பிக்களுக்கு எதிராக குற்றங்களைச் சுமத்தக்கூடிய அடிப்படைச் சாட்சியங்கள் இருக்கின்றனவா என்பதைக் குழு ஆராயும்.

போதிய சாட்சியங்கள் இருப்பதாகக் குழு கண்டால், குழுவின் முன் வந்து நிலைமையை விளக்கும்படி சம்பந்தப்பட்ட எம்.பிக்களுக்கு குழு நோட்டீஸ் அனுப்பும்.

அதன் பின்னர் குழு தனது அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்.

இது தொடர்பாக நாடாளுமன்றம் விவாதித்து சம்பந்தப்பட்ட எம்.பிக்களுக்கு என்ன தண்டனை விதிப்பது என்பதை வாக்குக்கு விட்டு தீர்மானிக்கும்.

எம்.பிக்கள் செய்த குற்றம் அட்டவணை 'ஏ' பிரிவின் கீழ் வந்தால் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அக்குற்றங்கள் அட்டவணை 'பி' பிரிவின் கீழ் வந்தால், நாடாளுமன்ற அமர்வுகளில் அந்த எம்.பிக்கள் கலந்து கொள்ள ஒருமாத காலத்தடை அவர்கள் மீது விதிக்கப்படும்.

இப்படி உரிமைகள் குழு விசாரணை நடைமுறை கூறுகிறது. [இ-எ]

# 6 எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைக் குழு

## முதல் கூட்டம் புதனன்று

கொழும்பு, மே 26

ஆறு எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள நடவடிக்கைக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர் வரும் புதன்கிழமை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடுகம்பொல விவகாரம், தேர்தல் ஆணையாளர் அறிக்கை மீதான விவாதம் மற்றும் பாதுகாப்பு வரி அதிகரிப்பினால் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய பிரச்சினைகள் பற்றி இக் குழு விவாதிக்கும்.

சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சம சமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவ சம சமாஜக் கட்சி, டி. ஜே. வி. பி. ஆகிய கட்சிகளே இக்குழுவில் அங்கம் வகிக்கின்றன.

ஸ்ரீலங்கா மக்கள்கட்சி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஈ. பி. ஆர். எல். எப் ஆகியவற்றின ஆதரவைக் கோரும் தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று கூறப்படுகிறது. [இ-எ]

# சமூக ஜனநாயக கட்சி என்ற பெயரில் புதிய அமைப்பு

கொழும்பு, மே 26

கொழும்பில் சமூக ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் புதிய அரசியல் அமைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றில் தீவிர உறுப்பினர்களாக இருந்த வழக்கறிஞர்கள் குழு ஒன்று புதிய கட்சியை ஆரம்பித்துள்ளது.

கட்சியின் கொள்கை விஞ்ஞாபனம் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

கட்சியின் தலைவராக திரு. ஹேமந்தா விக்கிரமசிங்கா இருக்கிறார்.

வட ஐரோப்பிய நாடுகளில் உள்ள சமூக சோஷலிச கொள்கைகளையே புதிய கட்சி பின்பற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட

# கொழும்பு மாவட்ட எம். பி. உட்பட மூவருக்குத் தடை!

கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கொழும்பு மாவட்ட எம். பி ஸ்ரீநாத் குமாரசிங்கா மற்றும் மேல்மாகாணசபை உறுப்பினர்களான இந்திரபால ஹேவவிதாரண, நோபர்ட் பெரேரா ஆகியவர்களுக்கு கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி தடை விதித்துள்ளது.

அவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் முடிவடையும் வரை இத்தடை நீடிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாவட்ட ஐ.தே.க கிளை கடந்த பதினெட்டாம் திகதி எடுத்த இந்த முடிவை, சிரேஷ்ட அமைச்சர்கள் இரண்டு பேர் ஊர்ஜிதம் செய்தனர்.

எதற்காக அம்மூவர் மீதும் தடை விதிக்கப்பட்டது என்பதற்கான காரணங்களை வெளியிட அந்த அமைச்சர்கள் மறுத்து விட்டனர்.

கட்சியின் கூட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளில் பங்குபற்றக் கூடாது என்று அவர்கள் மீதான தடை உத்தரவில் கூறப்பட்டுள்ளது. சட்டத்தரணியும், எம். பியுமான ஸ்ரீநாத் குமாரசிங்கா, தெஹிவளை கல்கிஸை மாநகர சபையின் மேயராக முன்னர் பணியாற்றியவர்.

கடந்த டிசம்பரில் லலித் அத்துலத்முதலி ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் காலியான இடத்திற்கு, வேட்பாளர் பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த திரு. குமாரசிங்கா நியமிக்கப்பட்டார்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களுடன் இம்மூவரும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கின்றனர் என்ற காரணத்திற்காகத் தான் அவர்கள் மீது கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்ற தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

தடை விதிக்கப்பட்டுள்ள இரண்டு மேல்மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவரான நோபர்ட் பெரேரா என்பவர் தனக்கு சொந்தமான அச்சகத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பத்திரிகையான 'ராஜாளியா'வை அச்சிட்டு வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

'ராஜாளியா'வை அச்சிடுவதை நிறுத்தும்படி நோபர்ட் பெரேராவுக்கு முன்னர் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாம். [இ-எ]

# குழந்தைமரணம்

சைக்கிளில் வந்த மூன்று வயதுக் குழந்தை ஒன்று டிராக்டர் சில்லுக்குள் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சோரன்பற்று மாசாரில் இடம்பெற்றது

குழந்தையை சைக்கிளில் ஏற்றி வந்தவர் முன்னால் சென்றுகொண்டிருந்த டிராக்டர் பெட்டியை ஒரு கையால் பிடித்துக்கொண்டு பக்கமாக வந்துகொண்டிருந்தார் என்றும்—

திடீர் என வீதியின் பள்ளம் ஒன்றில் சைக்கிள் விழவே குழந்தை தூக்கி எறியப்பட்டு டிராக்டரினால் நசியுண்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை மாசாரைச் சேர்ந்த ந. பிரதீபன் என்று தெரிவிக்கப்படுகிறது

ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட சமயம் குழந்தை வழியில் மரணமானது. [இ-117]


## வெற்றிடம்

க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்த பெண் எழுதுவினைஞர் தேவை 27-05-1992 புதன் காலை 10-00 மணிக்கு காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:
புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்
கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.

[சி-2355]

## BITSMANS

கல்வி நிறுவனம்
மானிப்பாய்

பிரிவு 3 O/L
DAY CLASS
(வழமையான ஆசிரிய குழுவினால்)

ஆரம்பம்: 28-05 92
வியாழன் காலை 8.00
[சி-2357]


# இரைச்சல் எழுப்பி எதிர்ப்பு இயக்கம்

## எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

கொழும்பு, மே 26

எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி அல்லது 23 ஆம் திகதி 'இரைச்சல் எதிர்ப்பு' [Noise Protest] இயக்கம் ஒன்றை நடத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு வருகின்றன.

இந்த 'இரைச்சல் எதிர்ப்பு' போராட்டம் இலங்கைக்கு புதுமையானது என்றாலும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்த வகை இயக்கம் பரவலாக நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிக்கப்பட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில், விசில்களை ஊதும்படியும் வாகன ஹோர்னில் சத்தம் எழுப்பும்படியும் கோயில் மற்றும் தேவாலய மணிகளை அடித்து ஓசை எழுப்பும்படியும் மக்களை எதிர்க்கட்சிகள் கோரவுள்ளன.

அன்று வீதிகளில் மறியல் இயக்கத்தை நடத்தவும் எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு வருகின்றன.

அரசின் அநீதிகளை கண்டிப்பதற்கு நாடாளுமன்றத்தை ஓர் அரங்காக பாவிப்பதற்கான வாய்ப்பு குறைந்து வரும் போது, வெகுசனப் போராட்டத்தில் இறங்குவதுதான் ஒரு வழி என்று எதிர்க்கட்சிகள் சிந்தித்து வருகின்றன. என்று தெரிவிக்கப்படுகின்றது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் வைரமுத்து செல்லத்துரை
[ கணக்காளர் ]

தோற்றம் : 12 — 5 — 1916
மறைவு : 27 — 4 — 1992

அன்பு ஐயா! காலமெலாம் கண்ணின் மணி போல் எம்மைக் காத்தீர்! உம் நினைவுகள் கனவாகிப் போனதோ! எம் நெஞ்சங்கள் குமுறுதையா!

திடீரென எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்பு ஐயாவின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் பங்குபற்றி பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை [27-5-1992] புதன்கிழமையன்று அவரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

P. S. கமம்,
7 ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

[20576]

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம் : 1936 - 08 - 22
மறைவு : 1992 - 4 - 26

### திருமதி தவமலர் பஞ்சலிங்கம்

அன்பான அம்மாவே
அருமைப் பெருந்தவமே
எங்கள் குடும்ப ஒளிவிளக்கே
எங்களை காலமெல்லாம் வழிநடத்திய-
அன்புத் தெய்வமே
என்பில்லா நாக்கால்
எப்பொழுதும் அழுகின்றோம்
துன்பம் துடைப்பவளே
தாமணியே நீ எங்கள்
இன்பம் பெருக்குதற்கு
இன்றே எழுந்தருள்வாய்

எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் பிரிவால் துயருறும்;

இங்ஙனம்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

[21137]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஸ்ரீ பெரும்புதூர் நிகழ்ச்சியின் போது

# ராஜீவ்காந்தியை கண்டித்து பல துண்டுப் பிரசுரங்கள்

சென்னை,. மே 26

ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட இடத்தில் ராஜீவ் காந்தியைக் கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்ட சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றன.

'பாசிஸவாதி' என்றும், 'இரத்தம் உறிஞ்சும் பிசாசு' என்றும் அத்துண்டுப் பிரசுரங்களில் ராஜீவ் காந்தி பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் அங்கு போடப்பட்டிருந்த பாதுகாப்பு காவலையும் மீறி நுழைந்த வெள்ளை நிற வான் ஒன்றில் இருந்து இத் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜீவ் காந்தியை கொன்ற தணு இத் துண்டுப்பிரசுரங்களில் புகழப்பட்டிருந்தார். (இ-3)

# அம்பாறை தனியாக பிரிக்கப்பட வேண்டும்

## இணைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை

வடக்கு — கிழக்கு நிரந்தர இணைப்பின் கீழ் அம்பாறைத் தொகுதி தனியாகப் பிரிக்கப்பட்டு, அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்பேசும் பிரதேச சபைகள் தனியான சுயாட்சி கவுன்ஸிலாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே வடக்கு — கிழக்கு நிரந்தர இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளும்.

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு தமிழ்க் கட்சிகளிடமும் தெரிவித்துள்ளது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மற்றும் ஏழு தமிழ்க் கட்சிகளும் இனப் பிரச்சினை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் இணைந்த தீர்வு ஒன்றை முன்வைக்க தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன என்று கூறப்படுகிறது.

வடக்கு — கிழக்கு நிரந்தர இணைப்பு விவகாரமே இணைந்த தீர்வு ஒன்றைச் சமர்ப்பிக்க இன்னும் தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் — முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் நடைபெறும் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் 90 சதவீத கருத்து ஒற்றுமை ஏற்பட்டுள்ளதாகவும் —

அநேகமாக அடுத்த தெரிவுக்குழுக் கூட்டத்தில இணைந்த தீர்வை அவை முன்வைக்கலாம் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

காணி, சட்டம், ஒழுங்கு தொடர்பான விடயங்களில் முழுமையான இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. [இ-3]

# கைதான இளைஞன் சங்கிலியன் வீதியை சேர்ந்தவராம்

கொழும்பு, மே 26

கொழும்பு புறக்கோட்டையில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட நல்லூரைச் சேர்ந்த இளைஞனின் பெயர் முருகேசு கேசவன் [17 வயது] என்று தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்த இந்த இளைஞன் புறக்கோட்டையில் உள்ள மல்வத்தை வீதியில் வைத்துக் கைது செய்யப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கொட்டாஞ்சேனை கல்லூரி வீதியில் வசித்து வந்த பிரஸ்தாப இளைஞன் திசையறிகருவி இயக்குநர் என்றும் —

இவரிடம் சென்னையில் பதிவு செய்யப்பட்ட சில திருமணப் பதிவு அத்தாட்சிப் பத்திரங்கள் காணப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர். [இ-3]

## திருட்டு

கொழும்பு, மே 26

கொழும்பில் மோட்டார் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறும்

# சுதந்திரக்கட்சி முடிவுக்கு ஹெல உறுமயவே காரணம்

கொழும்பு, மே 26

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளை பகிஷ்கரிக்கும் முடிவை சுதந்திரக்கட்சி எடுத்ததற்குக் காரணம், அக் கட்சிக்குள் இயங்கும் 'ஹெல உறுமய' அணியினரே.

இப்படி கொழும்பு அரசியல வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் உள்ள சுதந்திரக் கட்சி எம். பிக்களில் பெரும்பாலோர் ஹெல உறுமய அணி ஆதரவாளர்கள் என்று கூறப்படுகின்றது.

தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற முடிவு கட்சியால் எடுக்கப்பட்ட சமயம், களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியான கிங்ஸ்லி விக்ரமரத்னா தலையிட்டு, பகிஷ்கரிப்பு முடிவை புனராலோசனை செய்யும்படி கேட்டுக் கொண்டார் என்றும் —

அப்போது, அனுரா பண்டாரநாயக்கா குறுக்கிட்டு 'தெரிவுக் குழுவில் இருந்து சுதந்திரக் கட்சி தற்காலிகமாகத் தான் வாபஸ் வாங்குகிறது. முக்கிய விஷயங்களில் அரசு நியாயமாக நடந்து கொண்டால் சுதந்திரக் கட்சி தனது முடிவை மாற்றிக் கொள்ளும்' — என்று தெரிவித்தார் என்றும் கூறப்படுகிறது. [இ-எ]

## முக்கியபதவிகளை கைப்பற்ற ஹெல உறுமய அணி தீவிரம்

கொழும்பு, மே 26

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவரை நியமிக்கும் முயற்சியில், அக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் கட்சியின் முக்கிய பதவிகளைக் கைப்பற்றுவதற்கு ஹெல உறுமய அணியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு எதிர்வரும் ஜூலையில் 25 ஆம் திகதி கூடுகிறது. அன்றைய தினம் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு இடம்பெறும்.

நிர்வாகிகள் அனைவரும் கட்சி உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், எவரும் நியமிக்கப்படக் கூடாது என்றும் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இதேவேளை— சுதந்திரக் கட்சியின் மாதர் பிரிவுத் தலைவராக திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம் மே 26

கோப்பாய் தெற்கு அருள்மிகு முடி மன்னர் ஆலய வைகாசி விசாக வருடாந்தப் பொங்கல் விழா நாளை புதன்கிழமை காலை விசேட அபிஷேக தீபாராதனைகளுடன் நடைபெறவுள்ளது. (இ)

## நல்லுறவு முறிந்தது

கொழும்பு, மே 26

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே சிலகாலம் நிலவி வந்த நல்லுறவு தற்போது முறிந்துவிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்ட தேர்தல் முறைகேடுகள் குறித்தும், பிரதிப் பொலீஸ் மா அதிபர் உடுகம்பொல தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் குறித்தும், நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கை அரசினால் நிராகரிக்கப்பட்டதை அடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

# நீடிக்கப்பட்டுள்ளது

## தாமதியாது பங்குபற்றுங்கள்

உதயன் வெளியீட்டகத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும்

## ★ மாபெரும் கட்டுரைப் போட்டி ★

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டி அமைப்பு :

★ பாடசாலை மாணவர்களுக்கான போட்டி இரு பிரிவுகளாக, இரண்டு நிலைகளில் நடத்தப்படும்.

★ சகலரும் பங்குபற்றும் மற்றொரு பொதுப்போட்டி.

ஒவ்வொரு பிரிவிலும்,

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | தங்கப் பதக்கம் |
| இரண்டாம் பரிசு: | ரூ. 1,000-00 |
| மூன்றாம் பரிசு: | ரூ. 500-00 |

மற்றும் ஆறுதல் பரிசுகள்.

கொத்தணி மட்டத்தில் முதலாம் இடம் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

பரிசு பெறுவோர் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கான போட்டி

முதலாவது நிலையில் கோட்டக்கல்வி அதிகாரிகளால் கொத்தணி மட்டத்தில் நடத்தப்படும். இரண்டாவது நிலையில் கொத்தணியிலிருந்து தெரிவான மாணவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு தினத்தில் இறுதிப் பரீட்சை நடத்தப்படும். இப்பரீட்சைக்கு மாணவர்கள் நேரில் தோற்ற வேண்டும்.

2. பொதுப் போட்டி

★ போட்டியிற் பங்குபற்ற — கீழ்க்காணும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.

தலைப்புகள்:

1. தமிழர் பிரதேச மூலவளங்கள்
2. ஈழத் தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள்
3. இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிதை
4. பொருத்தமான தொழில் நுட்பம்
5. நெருக்கடி நிலையும் வெகுசனத் தொடர்பு சாதனங்களும்

போட்டி விதிகள்:

(i) கட்டுரை 800 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
(ii) ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம்.
(iii) கட்டுரையில் எழுதுபவரின் பெயர், முகவரி எழுதப்படல் ஆகாது.
(iv) கீழே பிரசுரமாகும் கூப்பனை நிரப்பி கட்டுரையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
(v) கடித உறையின் இடது மேல் மூலையில் ''கட்டுரைப் போட்டி'' எனத் தவறாது குறிப்பிடவும்.
(vi) கட்டுரைகள் 05-06-1992 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.
(vii) கட்டுரைகளை மூடிய கடித உறையில் உதயன் காரியாலயத்தில் நேரிலும் ஒப்படைக்கலாம். தபாலில் அனுப்புவோர், ஆசிரியர், உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
(viii) போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகளைப் பிரசுரிக்கும் உரிமை உதயனுக்கே உரியது. கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா;
(ix) யாழ். பல்கலைக்கழக நடுவர் குழு பரிசுக்குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

குறிப்பு:- போட்டிகள் தொடர்பாக எவ்விதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

## உதயன் கட்டுரைப் போட்டி - 1992

கட்டுரைத் தலைப்பு: ..............................

முழுப் பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

இக் கட்டுரை எனது சொந்தப் படைப்பு என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
கையொப்பம்

திகதி: ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நீண்ட கால பாவனைக்கு உங்கள் படங்களை சிறந்த முறையில் பிறேம் செய்து கொள்ளவும், மற்றும் சுவாமி படங்களை, சோக்கேஸ் கண்ணாடிகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும் யாழ். நகரில், யாழ். கண்ணாடி நிலையம், இல. 234, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். [21119]

Hy-Line Golden Comet கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நா. ஸ்ரீகாந்தன், C/o N. R. வீரவாகு, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [21122]

## தவறிவிட்டது

கடந்த 24-5 92 அன்று காலை கொழும்புத்துறைக்கும், சென் பற்றிக்ஸ் சந்திக்குமிடையில் மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 162/A, பாங்சால் வீதி முகவரியிலோ, மரியா வெல்டிங் வேக்ஸ், சின்னக்கடை முகவரியிலோ ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் S. யோசேப்பு. [21124]

23-5-92 ஆம் திகதி நீல நிற (B) பாக் உடன் அடையாள அட்டை இல: 381601900X, பாஸ்போர்ட், சாதகம் 3, புங்குடுதீவு நிவாரண அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், மூக்குக்கண்ணாடி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நாகலிங்கம் பூபாலசிங்கம், 93/24, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் விலாசத்திற்கோ, பால விநாயகர் ரேடேர்ஸ், கிளிநொச்சிக்கோ அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். [21129]

9-5-92 அன்று வவுனியா சோதனை முகாமில் 2 பாஸ்போர்ட், 2மூக்குக்கண்ணாடி, நோட்ஸ் புத்தகம் ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சின்னையா செல்லையா வைரவர் கோவிலடி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. சன்மானம் வழங்கப்படும். [4909]

## இலவச திருமண சேவை

29 வயது, கேட்டை, செவ்வாய் 12, ஆசிரியைக்கு ஏற்ற மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. [4887]

36 வயது, B Sc. மகம். லண்டனில் தொழில் புரிபவருக்கும், 37 வயது, பூரம், செவ்வாய் 4, B.A ஆசிரியைக்கும் ஏற்ற மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தமும் கவனிக்கப்படும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4888]

## சோதிடம்

ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: நேரம் தினமும் பிற்பகல் 2-00 மணி முதல், மாலை 7-00 மணி வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தலைமை: 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. தினமும் காலை 7-00 — 12-00 வரை. [21118]

## சிரட்டைகள் தேவை

தொகையாக சிரட்டைகள் எம்மால் கொள்முதல் செய்யப்படும். ஒரு கிலோ -/75 சதம். தரமான சிரட்டைகளாக இருத்தல் வேண்டும். ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், இல. 58, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (21096)

# தி. மு. கவின் புதிய தலைவர் யார்?

தி. மு. கவின் புதிய தலைவரைத் தெரிந்தெடுப்பதற்காக இக்கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் இரண்டாம் திகதி சென்னையில் நடைபெறும்.

இத்தகவலை தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகன் செய்தியாளர்களிடம் வெளியிட்டார். [இ-எ]

---

## நன்றி நவிலல்

சுக குறைவையும், தொழில் அற்றும் இருந்த எனது மகனுக்கு சுகத்தையும், தொழிலையும் அளித்து ஆசீர்வதித்த நமது ஆண்டவராகிய யேசுநாதருக்கும், பரிசுத்த கன்னிமரியாய்க்கும், அர்ச். யூ - முனிந்திரனுக்கும் இத்தால் எனது நன்றியைப் பகிரங்கப்படுத்துகின்றேன்.

[21127] — பக்தன்.

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**1992 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு**

புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை

கணிதம்: நயினை S. S. பிள்ளை
தமிழ்: சுந்தரலிங்கம்

**காலம்: 31-05-92** (ஞாயிறு 1 மணி)

பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் 28-06-92 க்கு முன் பதிவு செய்யவும்.

[சி-2430]

---

## ஆனந்த மருத்துவ நிலையம்

நரம்புத் தளர்ச்சி, வாதரோகம், உடல் பருமன், தலை முடி உதிர்தல், தலை மயிர் நரைத்தல், பீனிசம், குழந்தைகளின் வியாதிகள், மாதவிடாய்க் கோளாறுகள் உட்பட அனைத்து ரோகங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

சிகிச்சை நேரம் தினமும் { பிற்பகல் 2மணி முதல் மாலை 7 மணி வரை

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M, R. A. M. P. (Cey)
249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
[ரயில்வே கடவை அருகாமை]

தலைமை:- சிவா வைத்தியசாலை
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

நேரம் தினமும் } காலை 7 மணி முதல் 12 வரை

[21117]

---

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பதிவு இல. பீஏ — 48, 12-02-1971
ஜெயபுரம் - பல்லவராயன்கட்டு,
பூநகரி.

## அறிவித்தல்

### உறுப்பினர் இடாப்பு முடிவுறுத்தல்
**30 — 06 — 1992**

எமது சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர் வரும் ஆவணி மாதத்தில் நடைபெறவுள்ளதால் 30-06-1992 இல் உறுப்பினர் இடாப்பு முடிவுறுத்தப்படவுள்ளது. எனவே பூநகரியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்து கொள்ள தகுதியுடையோர் விரும்பின், தமக்கு அண்மையிலுள்ள மேற்படி சங்கத்தின் கிளைகளில் தமது பகுதிக்கான கிளையில் உறுப்புரிமை கோரி விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

கூட்டுறவு சேவையிலுள்ள,
ந. பாலசுப்பிரமணியம்,
செயலாளர்.

[சி-2353]

---

## இன்று
### கவின் கலைகள் பயிலகம்

வழங்கும்
சங்கீத ரத்தினம் சி. மகேந்திரன்
குழுவினரின்

**★ தாள வாத்தியக் கச்சேரி ★**

26 — 05 — 1992 (இன்று) மாலை 6 45 மணி
இடம்: மன்ற அரங்கு

★ பிரவேசம் இலவசம் ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2354]

---

## NEW SCIENCE ACADEMY

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

விசேட ஆங்கில மொழி வகுப்புகள்
விரிவான பாடத்திட்டம்

ஆசிரியர்: த. ந பஞ்சாட்சரம்

கற்கை நெறிகள்:

1. SPECIAL, N.C.E, ஆங்கிலம்
(A/L, G. A. Q. / Commerce தொழில் நுட்ப மாணவர்களுக்குரியது.)
ஆரம்பமாகிவிட்டது.
சனி, ஞாயிறு பிற்பகல் 3 - 5வரை
2. TOEFL Course
3. Advanced - English
(இலக்கியமயமானது)

கற்கை நெறி 2, 3 க்கு போதிய மாணவர் சேரின் ஜூன் முதல் வாரம் வகுப்புகள் ஆரம்பமாகும்; பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்க.

மேலதிக விவரங்களுக்கு:
- நிர்வாகி.

(சி-2356)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கப்டன் அலன்
(நடனசிகாமணி பாக்கியலிங்கம்)

தாயின் மடியில்: 06 — 05 — 1962
தாயக மடியில்: 26 — 05 — 1987

திதி: 30 - 05 — 1992

இந்த மண் எங்களின் சொந்த மண்
இந்த மண் மீட்புக்கு நாம் அனைவரும் தயார்!

வ. இ. நடனசிகாமணி-இரத்தினேஸ்வரி
குடும்பத்தினர்.

பாக்கியலிங்கம் வீதி,
வல்வெட்டித்துறை.

(21106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசாங்கம் செய்ய வேண்டியது

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சிறைப் பிடித்து தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா விடுக்கும் கோரிக்கையை இலங்கை அரசு நிறைவேற்றுவது கடினமான காரியம்.

இவ்வாறு இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் கலாநிதி நெவில் கனகரத்தினா தெரிவித்திருக்கிறார்.

கடினமான காரியம் என்று அவர் கூறியிருப்பதன் அர்த்தம், இயலாத காரியம்; அதனை செய்வதற்கு இலங்கை அரசு இணங்க மாட்டாது என்பதாகவே கொள்ளப்பட வேண்டும்

இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பித் திரு. பிரபாகரனைப் பிடிக்க வேண்டும் என்று கூறுவது பொறுப்பற்ற பேச்சு. எந்தப் பொறுப்புள்ள அரசும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காது — என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய அரசு அவ்வாறு ஒரு நடவடிக்கையில் ஈடுபடுவதை இலங்கை விரும்பவில்லை; அதற்கு அனுமதிக்கப்போவதும் இல்லை என்பது இங்கே தொனிக்கிறது.

திரு. பிரபாகரனைச் சிறைப் பிடித்து இந்தியாவுக்கு அனுப்பக் கூடிய சக்தி இலங்கை அரசுக்கு இல்லை என்பதும்—

இந்தியா மீண்டும் ஒருமுறை இலங்கைக்குப் படை அனுப்புவதை கொழும்பு அரசாங்கம் அனுமதிக்காது என்பதும்— புதுடில்லி அரசுக்கும், அதிகாரிகளுக்கும் தெரியாதவை அல்ல.

1990இல் இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பிய ஜனாதிபதி பிரேமதாஸாவுடனும், வடக்கு — கிழக்கில் இந்திய இராணுவத்தைத் தோற்கடித்த தலைவர் பிரபாகரனுடனும் சீண்ட வேண்டும்; அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையே இதுவாகும்.

இவர்கள் இருவரும் ஏற்படுத்திய அவமரியாதையாலும், தோல்வியாலும் தாக்குண்ட மனநிலையின் பழிவாங்கும் போக்கே இப்போதைய நடவடிக்கைகள். ஆகையால் அவற்றை வெறும் அடையாள நடவடிக்கைகளாகக் கருதிவிடலாகாது.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது இனப் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் மனங்கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகளைப் புறக்கணித்துவிட்டு இனப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று மனப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை இந்தியா ஏதோ ஒரு விதத்தில், இலங்கைக்குள் தனது விரலை வைக்கவே முயற்சித்துக் கொண்டிருக்கும். அதற்கான நெருக்குதல்களையும், அழுத்தங்களையும் பல்வேறு வடிவங்களில் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

எனவே இந்தியாவின் தொல்லைகளை நீக்கவும், அதன் தலையீட்டைத் தடுக்கவும் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை அரசாங்கம்— ஜனாதிபதி பிரேமதாஸா— வெளியிட வேண்டும். எதிர்க்கட்சிகள் குறிப்பாக சுதந்திரக் கட்சி குழப்ப முயற்சிக்கும் என்பது நிச்சயம். அதனை முறியடிக்கக் கூடிய விவேகமும், சாதுரியமும் ஜனாதிபதிக்குத் தேவை.

# இந்தியா தனது நலனைப் பேணவே புலிகளுக்குத் தடை விதித்துள்ளது

## தென்னிலங்கைப் பிரமுகர்கள் கருத்து

**இலங்கையில் விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பது குறித்து கொழும்பில் உள்ள பிரமுகர்கள் சிலர் வெளியிட்ட கருத்துகளை அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ''சண்டே ஒப்சேர்வர்'' பத்திரிகை தொகுத்து வெளியிட்டுள்ளது.**

**அதில் இடம் பெற்றிருந்த யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்த பௌத்த மத தூதுக் குழுவின் தலைவர் வண. மாதம்பகம அஸாஜிதேரர், நீர்கொழும்பு சென். பிலிப்ஸ் நேரிஸ், தேவாலயத்தைச் சேர்ந்த வண. பிதா அல்பிரட் அலெக்ஸாண்டர், கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கொடிகார ஆகியோரின் கருத்துக்கள் கீழே பிரசுரமாகி உள்ளன.**

### அஸாஜிதேரர்

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்த பௌத்த மத தூதுக் குழுவின் தலைவரான வண மாதம்பகம அஸாஜிதேரர் சொன்னதாவது;

தமது உள்வீட்டு நிர்ப்பந்தங்கள் காரணமாகவே, விடுதலைப் புலிகள் மீது இந்தியா தடை விதித்தது.

இலங்கைக்கு இத்தடை உதவுமா? அல்லது உதவாதா? என்பதை இப்போது சொல்ல முடியாது.

ஆனால் ஒன்றை மட்டும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு உதவ வேண்டும் என்பதற்காக இந்தியா விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கவில்லை என்பதே அதுவாகும்.

இலங்கையின் நலன்களைக் கருத்திற்கெடுத்தோ அல்லது இந்திய - இலங்கை உறவுகளை வளர்க்கவோ இந்தியா இத் தடையைக் கொண்டு வரவில்லை.

இந்திய அமைதிப்படையுடன் விடுதலைப் புலிகள் யுத்தம் நடத்திய போதும் கூட இந்தியா விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கவில்லை. இன்று தமது சொந்த நலன்களுக்காக இந்தியா இத் தடையை விதித்து உள்ளது.

இது விஷயத்தில் இந்தியாவை இலங்கை ஏன் பின்பற்ற வேண்டும் என்பதற்கு காரணம் ஏதும் இல்லை.

இலங்கையில் விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பது நிச்சயமாக சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்.

சில எதிர்க்கட்சியினர் விமர்சிப்பது போன்று யாழ்ப்பாணத்தில் நாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூன்றாம் நிலைத் தலைவர்களுடன் பேச்சுகள் நடத்தவில்லை.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதன் மூலம் இந்த யுத்தத்தை உடனே முடிவுக்குக் கொண்டுவர முடியுமானால், தடையை விதிக்கலாம்.

ஆயுதப் போராளி அமைப்பு ஒன்றை வெறும் தடையைக் கொண்டு வருவதன் மூலம் அழித்து விட முடியுமா?

விடுதலைப் புலிகள் மீது இங்கு தடை விதிப்பது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதற்கு ஒப்பான செயலாகும்

இவ்வாறு வண. அஸாஜி தேரர் கூறினார்.

### வண. பிதா அல்பிரட் அலெக்ஸாண்டர்

நீர்கொழும்பு சென். பிலிப்ஸ் நேரிஸ் தேவாலயத்தைச் சேர்ந்த வண பிதா அல்பிரட் அலெக்ஸாண்டர் சொன்னதாவது;

ஒவ்வொரு நாடும் தனது நலன் கருதியே செயல்பட வேண்டும்.

இந்தியா தனது சொந்த நலன் கருதியே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ளது.

நாம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தாலும் சரி, தடை செய்யாவிட்டாலும் சரி யுத்தம் ஒன்று எம் மடி மீது தான் நடக்கிறது. We have a war our lap].

பல சமாதானக் குழுக்கள் யாழ். சென்றன. விடுதலைப் புலிகள் அவற்றின் முயற்சிகளுக்கு செவி சாய்த்துள்ளனர். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு — கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் ஆதிக்க (Domiant) சக்தியாக உள்ளது. அவர்களைத் தனிமைப்படுத்த முடியாது. அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாகவே சில அரசியல் சக்திகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கோருகின்றன.

இவ்வாறு வண. பிதா அலெக்ஸாண்டர் கூறினார்.

### பேராசிரியர் ஷெல்டன் கொடிகார

கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஷெல்டன் கொடிகார சொன்னதாவது;

நான் புதுடில்லி சென்றிருந்த போது நிகழ்ச்சி ஒன்றில் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவுடன் கலந்து கொண்டேன்.

''தமிழர் பிரச்சினை உங்கள் பிரச்சினை; நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள்'' என்று திரு. நரசிம்மராவ் அங்கு கூறினார்.

அத்துடன் ''விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும்படி எனக்கு நிர்ப்பந்தம் தருகின்றார்கள்'' — என்றும் அவர் கூறியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இந்தியா தனது நலன்களைப் பேணவே விடுதலைப் புலிகள் மீது தடை விதித்திருக்கிறது.

இப்படி அவர் கூறினார்.

[இ-எ]

★

# இளைய தலைமுறையின் மீதுள்ள நம்பிக்கை புலப்படுத்தப்படுகிறது

## முருகையன் கவிதை நூல்கள் விழாவில் பேச்சு

சமூக முரண்பாடுகளைக் கூர்மையாக நோக்கி அவற்றுக்குத் தீர்வு காணும் பண்புகளையும், விஞ்ஞான அறிவியல் ரீதியான உண்மைகளுக்குக் கலை வடிவங்கள் கொடுக்கும் தன்மையையும் இந்த இரு நூல்களிலும் காணமுடிகிறது.

இவ்வாறு கவிஞர் முருகையனின் 'மாடும் கயிறுகள் அறுக்கும்', 'நாங்கள் மனிதர்' ஆகிய இரு கவிதை நூல்களின் அறிமுகக் கருத்துரை நிகழ்ச்சியில் உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் கூறினார்.

கவிஞன் தான் வாழ்ந்த காலத்தைப் படம்பிடித்துக் காட்டுபவன். 1987 இல் நடந்த கசப்பான சம்பவங்களை எடுத்துக்காட்டாவிடில் அவன் கவிஞனாயிருக்கமாட்டான். இந்திய இராணுவத்தின் வரவினால் எழுந்த தாக்கங்களை கவிதை மூலம் வெளிப்படுத்திய கவிஞர் முருகையன், இளையதலைமுறை மீது தனக்கிருக்கும் நம்பிக்கையையும் இந்த நூல்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அவரது கவிதை மொழி நடையில் புதிய ஈழத் தமிழ்ப் பேச்சோசைப் பண்பு காணப்படுகிறது— என்றும் அவர் சொன்னார்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மன்றமும், தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய மேற்படி நிகழ்ச்சிகுத் தலைமை வகித்த திரு எஸ். விசாகரூபன் தமது உரையில் கூறியதாவது:-

இனப்பற்று, மொழியியல், சாதி அடக்குமுறைப் போராட்டம், முற்போக்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கார்த்திகேயன் நிம்மதி

சென்னை, மே 26

கடவுள் அருளால் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்து விட்டோம். அதனைப் பரிசீலித்துத் தீர்ப்பு வழங்குவது நீதிமன்றத்திடம் விடப்பட்டுள்ளது.

விசேட புலனாய்வுப் பிரிவுத் தலைவர் திரு. டி. ஆர். கார்த்திகேயன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான குற்றப்பத்திரிகையை விசேட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் திரு கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் முன் கண்டவாறு சொன்னார்.

[த-எ]

# பிரச்சினைகளைத் துச்சமாகக் கருதி சளைப்பின்றி இறைபணி செய்பவர்

## ஆத்மஜோதியின் பிறந்ததின விழாவில் சுவாமிகள்

யாழ்ப்பாணம், மே 26

போர்க்கால சூழ் நிலையில் உண்டாகும் பிரச்சினைகளைத் துச்சமாகக் கருதி தொடர்ந்தும் சளைப்பின்றியும் களைப்பின்றியும் இறை பணியும், தமிழ்ப் பணியும் செய்து கொண்டிருக்கிறார் பெரியார் ஆத்மஜோதி முத்தையா. இறைவனின் செங்கோலை ஏற்று சைவமும், தமிழும் மேலும் தளைத்து ஓங்குவதற்கு அவர் உழைக்கும் பொருட்டு அவர் ஜெகஜோதியாக வாழவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்.

ஆத்மஜோதி முத்தையாவின் 75 ஆவது பிறந்த தின விழா அண்மையில் கைதடி சைவச் சிறார் இல்லத்தில் நடைபெற்றது.

அங்கு ஆசியுரை வழங்கும் போது சுவாமிகள் மேலும் தெரிவித்ததாவது:-

மெழுகுவர்த்தியை ஏற்றிப் பின் அதனை அணைத்து பிறந்தநாள் கொண்டாடும் முறை எமது கலாசாரத்திற்கு முரணானது. அறிவையும் வாழ்வையும் ஒளி பெறச் செய்யும் வகையில் ஏற்றப்படும் சுடரை அணைப்பது தவறானது — என்றார்.

நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறியதாவது:-

இருந்தாலும் உலகத்தில் கணிசமான மக்கள் இந்து மதத்தைப் பின்பற்றுவதால் அது உலகிற்கு வழிகாட்டும் மதம் அது என்பதை ஆத்மஜோதி முத்தையா உணர்த்தி வருகிறார். பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களிலும் அவர் அக்கறையுடன் தொண்டாற்றியவர்; தொண்டாற்றுபவர்— என்றார்.

மண்ணையும் எமது உரிமைகளையும் மீட்க அணிதிரண்டு போராடுவது போல், இந்து மதத்தை வளர்க்கவும் ஆதரவற்ற குழந்தைகளுக்குப் பணி செய்யவும் மக்களை அணிதிரட்டுபவர் முத்தையா. அவரது ஆன்மீக பலம் எடுத்த கருமத்தை முடிக்கும் திறனை அவருக்குக் கொடுத்துள்ளது— என்று சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. எஸ். நவரத்தினராசா கூறினார்.

சைவப்புலவர் சு. மகாலிங்கம், குலபதி ஆ. கந்தையா, உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

ஏழாலை ஸ்ரீபாதாள ஞானவைரவர் தேவஸ்தான இந்து இளைஞர் மன்ற ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவில் ஆத்ம ஜோதி முத்தையாவுக்கு வாழ்த்துப் பத்திரங்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

[அ-111]

### பஸ் சேவை

யாழ்ப்பாணம் — அம்பனை மினிபஸ் சேவை இன்று செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகிறது.

768 பாதையால் சுன்னாகம் ஊடாக நடைபெறும் இச்சேவை பயணிகளின் நலன் கருதி தெல்லிப்பளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் செல்லத்துரை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 92, பழம் வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை [முன்னாள் ஸ்ரீ ராசதுரை ஸ்ரோர்ஸ், பலாங்கொடை உரிமையாளர்] 25-5-92 அதிகாலை காலமாகிவிட்டார். இவர் நாகலிங்கம் முத்துப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை, கந்தசாமி, செல்வராணி, செல்வநாயகம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மருதாய் இராசலக்சுமி, முத்துக்கிருஷ்ணன், அன்னலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாக்கியம், இரத்தினம், காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரரும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற சின்னத்தம்பி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை புதன்கிழமை [27-5-92] நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்

92, பழம்வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[21138]

## பொன்னையா வேலும்மயிலும்

[இளைப்பாறிய அதிபர்]

அச்சுவேலி தெற்கு செட்டிய குறிச்சியைச் சேர்ந்த பொன்னையா வேலும்மயிலும் 25-5-92 நண்பகல் காலமானார். இவர் தில்லைநாயகியின் அன்புக் கணவரும், வள்ளியம்மை, காலஞ்சென்ற சிவகுரு ஆசிரியர், காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் சகோதரரும், உருத்திரன் [கனடா], உருத்திராணி, யோகேஸ்வரன் [கனடா], புவனேஸ்வரன் [பிரான்ஸ்], விமலராணி, வசந்தராணி [கனடா], வசந்தேஸ்வரன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், சகுந்தலாதேவி [கனடா], குலேந்திரநாயகம் [கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி வடக்கு], சித்ரா [கனடா], கிருஷாந்தினி [பிரான்ஸ்], பாஸ்கரமகாராஜா [தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலி-கிழக்கு பிரதேச சபை], யோகராசா [கனடா] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு இன்று 26-5-92 பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ஆ. குலேந்திரநாயகம்

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு.

[21139]

## சிவலிங்கம் தியாகலிங்கம்

[களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலை]

கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த சந்திரா என அன்பாக அழைக்கப்படும் சிவலிங்கம் தியாகலிங்கம் அவர்கள் 25 - 05 - 1992 அன்று காலமானார்.

அன்னார் திருமதி மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிவலிங்கம்—நீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணபவானந்தா—தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், பிரசாந்த் [யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்], நிவேதினி [யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி], கிருஷாந்த் [யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

90, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[21134]

## பி. எஸ். ஞானப்பிரகாசம்

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் அதிபர் பண்டிதர் பி. எஸ். ஞானப்பிரகாசம் 23-05-92 இல் லண்டனில் காலமானார்.

இவர் தார்சிலம்மா ஜெயராணியின் அன்புக் கணவரும், ஜெயப்பிரகாசம் [லண்டன்], செல்வராணி [கனடா], தவப்பிரகாசம் [ஆசிரியர், இளவாலை], மதுரராணி [ஆஸ்திரேலியா], தியாகராணி [லண்டன்], யோகராணி, சங்கைக்குரிய சகோதரி பவளராணி A. C. [மட்டுநகர்], குலப்பிரகாசம் [கனடா], புனிதராணி [லண்டன்], அமிர்தராணி [ஆஸ்திரேலியா], விமலராணி [லண்டன்], நவராணி [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும்,

கிளி [லண்டன்], ஆனந்தராஜா [லண்டன்], மதுரநாயகி [ஆசிரியை, இளவாலை], சேவியர் [ஆஸ்திரேலியா], தேவரட்ணம் [லண்டன்], அலெக்ஸ்ஸாண்டர் [ஆசிரியர், மிருசுவில்], ரீற்றா [லண்டன்], பரராஜசிங்கம் [லண்டன்], ரொன் [ஆஸ்திரேலியா], மரியதாஸ், ஜெராட் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், அருளானந்தத்தின் [மட்டுநகர்] மைத்துனரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும்.

தகவல் :
ஏ. எஸ். ஏ. அலெக்ஸ்ஸாண்டர்

பழைய வாய்க்கால்,
மிருசுவில்.

[21140]

## இன்று

யாழ்ப்பாணம், மே 26

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தா அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதும்.

★ ★ ★

மட்டுவில் கொத்தணி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. சிவகுருநாதன் பங்குபற்றுவார். திருமதி விமலாதேவி சிவகுருநாதன் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்குவார்.

★ ★ ★

''கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களின் போஷாக்குப் பராமரிப்பு'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று காலை 8. 30 மணி முதல் மாலை வரை கொக்குவிலில் உள்ள அகதிகள் புனர்வாழ்வுக் கழக பணிமனையில் இடம் பெறும்.

## செட்டிக்குளத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மற்றவர்கள் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர். காவலரண்களைப் புலிகள் கைப்பற்றினர்.

அப்பகுதியில் ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் புலிகள் அள்ளி எடுத்தனர். கைப்பற்றப்பட்ட எட்டு காவலரண்கள், இராணுவத்தினர் விட்டுச்சென்ற டிராக்டர் என்பன எரிக்கப்பட்டன.

தந்திரிமலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என்றும், 15க்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஒ-எ-10]

## இளைய....

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுத்து இலக்கியம் என்ற பலதரப்பட்ட மாற்றங்களின் ஊடாகவும் பேச்சு மொழியுடன் மக்களின் பழக்கத்தில் உள்ள வேற்று மொழிச் சொற்களையும் கையாண்டு கவிதைக்கு மெருகேற்றிய இவரது பன்முகப்பட்ட தன்மை தமிழ், இலக்கிய விமர்சனத்திற்கு முக்கியமானது. தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்து வெளிவரும் கவிதைகளுடன் முருகையனது. கவிதைகளை ஒப்புநோக்கின், அவரது விஞ்ஞான நோக்குக் குறித்த தன்மைகளை நாம் உணர முடியும் — என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன் தமது அறிமுக உரையில் —

தமிழ்க் கவிதைக்கு இருக்க வேண்டிய சொற்களஞ்சியமும், புதுமையும், நகைச்சுவை சந்தங்கள் எல்லாவற்றுடன் புதிய சொற்பிரயோகங்களும் சேர்ந்து கவிதைகளுக்கு வளம் சேர்க்கின்றன. கவிஞர்களுக்கு மனித குலத்தின் மீது இருக்க வேண்டிய பரிவு கவிதைகளில் காணப்படுகின்றன —

கவிதைக் கோட்பாடுகள் பற்றிய நூல்கள் இங்கு வெளிவர வேண்டும். பல்கலைக்கழகத்தில் கவிதைக்கென ஒரு பீடம் அமைப்பதால் இத்துறை வளரும் — என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் திருமதி அம்மன்கிளி முருகதாஸ் உட்பட மற்றும் பலரும் பேசினர். (அ-111)

# ரூபாவின் மதிப்பை குறைக்க முடிவு?

கொழும்பு, மே 26

பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, ரூபாவின் மதிப்பைக் குறைத்து, பொருள்களின் விலைகளை அதிகரிக்கும் திட்டம் ஒன்றை அரசு பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி வட்டாரங்களை மேற்கோள் காட்டி '' சண்டே ஐலண்ட் '' இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

மா, பாண் மற்றும் எரி பொருள்களின் விலைகளை அதிகரிப்பது —

ரூபாயின் மதிப்பை, அமெரிக்க டொலருக்கு எதிராக 45 சத வீதமாகக் குறைப்பது ஆகியன அத்திட்டத்தில் அடங்கியுள்ளன என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

நாணய மதிப்புக் குறைப்பு அடுத்த மாதம் அமுலுக்கு வரலாம் என்றும், நாட்டின் ஏற்றுமதிக்கு அது உதவும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இது இறக்குமதி செய்யப்படும் பாவனைப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[உ-எ]

# ஒரு கப்பலே இனிமேல் வடக்கிற்குச் சேவை

கொழும்பிலிருந்து வடக்கிற்கான கப்பல் சேவையில் அடுத்த மாதம் முதல் ஒரு கப்பலே ஈடுபடும் என்று தெரியவருகிறது.

'குமண', 'லில்லி', 'கோமாரி' என்ற மூன்று கப்பல்கள் வட பகுதிக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. அதில் லில்லியின் சேவை கடந்த மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டது.

இனிமேல் 'கோமாரி' கப்பலின் சேவையும் நிறுத்தப்பட்டு குமண கப்பல் மட்டுமே மாதம் ஒரு தடவை சேவையில் ஈடுபடும் என தெரியவருகிறது. [உ-5]

# லங்கா சிமெந்து ஊழியரை வேலைக்கு வர அழைப்பு

யாழ்ப்பாணம், மே 26

லங்கா சிமெந்து தொழிற்சாலையில் அடுத்த மாதம் ஏழாம் திகதி தொடக்கம் மீண்டும் பணிபுரிய வருமாறு ஊழியர் அழைக்கப்பட உள்ளனர்.

முதற்கட்ட வேலைகளைச் செய்வதற்காக ஊழியரில் ஒரு சாரார் அழைக்கப்பட உள்ளனர் என்று லங்கா சிமெந்து நிறுவனத்தின் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடிசார்பகுதி, வைத்திய நிலையம், மின்சாரப் பகுதி, பாதுகாப்புப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களே வேலைக்கு அழைக்கப்படவுள்ளனர். இதற்கான அறிவுறுத்தல் கடிதங்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை வழங்கப்பட இருப்பதாகவும் அறிய வந்துள்ளது.

இம்மாதம் நான்காம் திகதி நிறுவனத்தின் தலைவர் அனுப்பி வைத்த சுற்றுநிருபத்தினைத் தொடர்ந்தே முதற்கட்ட வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. [அ-15]

# அகதிகளை கூட்டி வருவதால் பல கஷ்டங்கள் உருவாகும்

## ஐ. நா. அதிகாரிகளுக்கு விளக்கம்

தமிழகத்தில் இருந்து வரும் அகதிகளை குடாநாட்டிற்குள் கொண்டு வந்து குடியமர்த்துவது சூழ்நிலைக்கு ஏற்புடையதல்ல. அதனால் பல கஷ்டங்கள் ஏற்படும்.

— இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள ஐ. நா, அகதிகள் தூதரக அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து வந்த ஐ. நா. தூதரக அதிகாரிகளைச் சந்தித்து உரையாடிய போது மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டுக்குள் ஏற்கனவே பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்கின்ற நிலையில், தமிழகத்தில் இருந்து வரும் அகதிகளை இங்கு கொண்டு வந்து குடியமர்த்துவது சாத்தியமற்ற — சூழ்நிலைக்கு ஏற்புடையதல்லாத — விடயம் என்று ஐ. நா. அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதே வேளை —

''ஒரு நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ள மக்கள் அகதிகள் அல்லர். அவர்களைப் பராமரிப்பது ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் பணி அல்ல. ஐ. நா. அகதிகள் சாசனத்தின் படி நாட்டை விட்டு வெளியேறிச் சென்றவர்களே அகதிகளாகக் கணிக்கப்படுகின்றனர்.'' — என்று இங்கு வந்துள்ள அதிகாரிகளில் ஒருவரான திரு. லூயிஸ் தெரிவித்தார்.

## சிப்பாய் பலி!

அச்சுவேலி, பத்தமேனிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மிதிவெடி வைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியான அதே சமயம், மேலும் படையினர் சிலர் காயங்களுடன் தப்பி ஓடினர். [ஓ]

## ஆனையிறவில் தாக்குதல்

தென்மராட்சி, மே 26

நேற்று முன்தினம் இரவு ஆனையிறவு முகாமிலிருந்து தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் வீச்சும் இடம்பெற்றது.

நள்ளிரவு 11-15 மணியளவில் ஹெலியொன்று ஆனையிறவு முகாமுக்குள் இறங்கிச் சென்றது. [உ-117]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 05 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org